# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 203/2024 நாள்.13.3.2026

### DW2- திருமதி. அனிதா, க/பெ. திரு.ராஜா

வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் கிறிஸ்துவரா இந்துவா என்றால் கிறிஸ்துவர் ரோமன் கத்தலிக் பிரிவை சேர்ந்தவர். என்னுடைய பள்ளிபடிப்பில் சான்றுகளில் இந்து என்று உள்ளது என்றால் ஆமாம். என்னுடைய முதல்விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும். என் தகப்பனார் 2019இல் இறந்தார் என்றால் ஆமாம். என் அப்பாவுக்கு இருதய அறுவை சிகிச்சை எந்த ஆண்டு செய்தார்கள் என்றால் 2002. அவ்வாறு சிகிச்சை பிறகு தொடர் சிகிச்சையில் இருந்தாரா என்றால் ஆமாம். என்ன வழக்கு என்றால் பாக வழக்கு. என்னுடைய பிரமாணவாக்குமூலத்தில் 4வது பாராவில் சொல்லபட்டுள்ள சங்கதிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தம் என்றால் அவர் திருமணம் செய்தது சொத்து வாங்கிய சங்கதியை சொல்லியுள்ளேன். நான் சொத்து வாங்கிகொண்டு போனதை 4வது பத்தியில் சொல்லவில்லை என்றால் ஆமாம். எந்தெந்த சொத்தை வாதி யார் யாரிடம் அடமானம் வைத்ததை என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் ஆமாம். அந்த கடன்களை எனது தாயாரும் தம்பியும் அடைத்ததற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். செங்கிபட்டி காவல்நிலையத்தில் புகார் இருந்தது என்றும் பணத்தை திரும்ப கொடுக்கவில்லை என்றால் அவர் மீது வழக்கு பதியப்படும் என்ற விஷயம் குறித்து ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். எனது தாயாரும், எனது தம்பியும் எந்த சொத்தை விற்றார்கள் எந்த மனையை அடமானம் வைத்தார்கள் என்று எண் குறித்தும் யார் என்றும் தொகை என்ன என்றும் சொல்லவில்லை என்றால் ஆமாம். வாதி என் அப்பா உயிருடன் இருக்கும் போதே குடும்ப சொத்தை அழித்தார் என்று சொல்லியுள்ளேனே அது எந்த சொத்து என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். எந்த வருடம் வாதி அவருடைய சொத்தை பாகம் பிரித்து கேட்டு பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் ஆமாம். அவருக்கு பாகமாக நடுபடுகையில் 10 மா, நடுகாவேரியில் 7 மா நிலம் ஒதுக்விட்டது தொடர்பாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். நான் வாதிக்கு எந்தவிதமான நிலமும் கொடுக்கவில்லை என்றும் அதனால்தான் இந்த பாக வழக்கு போட்டுள்ளார் என்றால் சரியல்ல அவர் மேற்படி 7மா, 10 மா நிலங்களை அவரே விற்று பணம் எடுத்துகொண்டார். அந்த பத்திரம் தாக்கல் செய்யவில்லை என்றால் உள்ளது தாக்கல் செய்யலாம். உலகப்பநாட்டார் மகன்

செந்தில்குமாருக்கு நிலத்தை விற்றார் என்று சொல்லிவிட்டு பத்திரம் பதிவு செய்துகொடுக்கவில்லை என்று சொல்லியுள்ளேனா என்றால் நான் என் பாகம் கேட்டேன் பத்திரம் பதிவாகவில்லை. நான் ஸ்ரீதர் என் அம்மா ஆகியோர் இந்திராவுக்கு 10 மா நிலம் விற்றதாக உள்ளது என்றால் ஆமாம் அது வாதி ராஜாவுக்காகதான் விற்று கொடுக்கபட்டது. நான் சொல்வது பொய் என்றும், ராஜாவுக்கு விற்று கொடுக்கவில்லை என்றும் நாங்கள் எடுத்துகொண்டோம் என்றால் சரியல்ல அந்த பணத்தை எடுத்துகொண்டுதான் வாதி எனக்கு எழுதிகொடுத்தபோது சாட்சி கையெழுத்து போட்டுகொடுத்துள்ளார். அசல் உயில் பத்திரம் என்னிடம் உள்ளதா என்றால் என் தம்பி வங்கியில் கடன் வாங்கியுள்ளான் அங்குள்ளது. பி.சா.ஆ.1 ஆவணத்தில் ஸ்ரீதருக்கு எழுதவில்லை என்றும், ஸ்ரீதரனுக்கு எழுதபட்டுள்ளது என்றால் ஆமாம். உயில் செல்லாத உயில் என்றால் சரியல்ல. எனக்கு எழுதிகொடுக்கபட்ட புல எண் என்ன என்றால் 132/8 திருவாலம்பொழில். 132/8 இன்றையதேதிவரை என்பது ஜீலியட் ராஜா என்பவர் பெயரிலுள்ளது என்றால் ஆமாம் பட்டா கோரி மனுதாக்கல் செய்துள்ளேன். பி.சா.ஆ.3 ஆவணத்தில் இன்றையதேதி வரை வாரிசு மூவர் பெயரிலும் உள்ளது என்றால் ஆமாம். என் பெயருக்கு உத்தரவு போட்டுள்ளார்கள் ஆவணம் மாறவில்லை. எங்கள் வீட்டு சொத்துக்கள் தனிதனியாக பிரிந்துவிட்டதா கூட்டாக உள்ளதா என்றால் தெரியாது. என் பிரமாண வாக்குமூலத்தில் பாகம் பிரித்துகொள்ளபட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். என் பாட்டி ஆனந்தமேரி என்றல் ஆமாம். என்பாட்டிக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் இரண்டு ஆண்கள் ஒருவர் இறந்துவிட்டார், அவர் பெயர் ராபின்சன் என் அப்பாதான் மற்ற ஒருவர். ராபின்சனுக்கு திருமணமாகி குழந்தைகள் உள்ளதா என்றால் தெரியாது. 132/8 ஆனந்தமேரி பெயரிலுள்ள சொத்து என்றும் அதை எழுதிகொடுக்க மற்றவர்களுக்கு எழுதிகொடுக்க உரிமையில்லை என்றால் ஆனந்தமேரி என் அப்பாவுக்கு எழுதிவைத்தார், என் அப்பா ஸ்ரீதருக்கு எழுதிவைத்தார். அதனால் பிரச்சனை வந்ததால் ஸ்ரீதர் எனக்கு எழுதிவைத்தார். தஞ்சாவூரில் உள்ள வீட்டில் வாதிதான் தற்போதுவரை வசித்து வருகிறார் என்றால் இடையில்தான் குடிவந்தார். எந்த காலத்திலிருந்து என்றால் என் அப்பா உயிருடன் இருந்தபோதிலிருந்து. அந்த வீட்டின் வாடகை ஒத்தி பத்திரம் வாதி கொடுத்து வாங்கி வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. பி.சா.ஆ.1 செல்லாத உயில்

என்றால் அது செல்லும் அதனால்தான் லோன் கொடுத்துள்ளார்கள். அசல் தாக்கல் செய்யவில்லை என்றும் சான்றுநகல்தான் தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம். குடும்ப வாரிசுகள் எல்லோருக்கும் இந்துக்கள் முறையை பின்பற்றுபவர்கள் என்றும் அந்த அடிப்படையில் வாதிக்கு தலா ஒருபாகம் கிடைக்ககூடியது என்றால் சரியல்ல.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.03.13 15:22:15 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**